

கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் ஒருங்கிணைப்பில் சூலூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் சிபி.செந்தில்குமார், சூலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பரசு, மோப்பிரிபாளையம் பேரூர் கழக செயலாளர் சசிக்குமார் ஆகியோர் ஏற்பாட்டில் சூலூர் வடக்கு ஒன்றிய பாஜக பொருளாளர் சதீஷ்குமார், தேமுதிக மாவட்ட மகளிரணி பிரேமலதா மற்றும் அதிமுக, டி.வி.கே கட்சிகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், செட்டிப்பாளையம் அப்துல் ரகீம், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், விழப்பள்ளம் கிராமத்தில், ஜெயங்கொண்டம் முதல் சின்னவளையம், மணக்கரை, பிராஞ்சேரி, விழப்பள்ளம், முதுகுளம், சின்னகல்லேரி, பூவாணிபட்டு வழியாக அணிகுதிச்சான் வரை செல்லும் புதிய மினி பேருந்து சேவையினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். உடன் க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ., இரா.மணிமாறன், கே.சி.லூயிகதிரவன், ஆர்.பாலமுருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## புதிதாக பணி நியமனம் பெறும் –

# இடைநிலை ஆசிரியர்கள் பணியினை கவனமாக மேற்கொள்ள வேண்டும்!

## அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி பேச்சு!

சென்னை, ஜூலை 26-

நேற்று முன்தினம் (24.07.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 2457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, “திறன்” இயக்கம் மற்றும் “TN SPARK” பாடத்திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 2457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் விழாவிற்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமை வகித்தார். இவ்விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்பேசியதாவது:

ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 2457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் விழா



வில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் எனது வணக்கங்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக பணி நியமனம் பெறும் இடைநிலை ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியினைதமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் படித்தார்.

விழாவில் அவர் பேசிய தாவது:-

இன்று புதிதாக பணி நியமனம் பெறும் இடைநிலை ஆசிரியர்களாகிய நீங்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் சமுதாய விதைகளாக தமிழ் நிலத்தில் தூவப்படவிருக்கிறீர்கள். விதைகளாக தூவப்படும் நீங்கள் பல இலட்சம் மாணவச் செல்வங்களை மரங்களாக உருவாக்கும் பணியில் உங்களை ஈடுபடுத்தப் போகிறீர்கள்.பள்ளியில் நீங்கள் அறம் சார்ந்த பாடங்களை நடத்திட வேண்டும். அறிவை மட்டுமே நம்பி நடைபெறும் இந்த திராவிட மாடல் ஆட்சியில் ஆசிரியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு.அன்பையும் பண்பையும் கூட்டி மாணவர்களுக்கு திசைகாட்டிகளாக இருக்கக் கூடியவர்கள் ஆசிரியர்கள்.அறிவு ஆயுதங்களாக விளங்கும் ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் உடல் நலக் குறைவினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் எங்களிடம் பணி நியமன ஆணை வழங்கும் விழா குறித்து கேட்ட பொழுது “நீண்ட இடைவெளிக்கு பிறகு 2457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமனம் வழங்க உள்ளதால் உங்கள் திருக்கரங்களால் வழங்கினால் தான் முறையாக இருக்கும்” எனக் கூறினோம். ஒரு நல்ல மனிதர் இந்த நாட்டை எப்படி ஆளுகிறார் என்பதற்கு உதாரணமாக, “24-ஆம் தேதி பணி நியமனம் என்று ஆசிரியர்களது குடும்பமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.என்னால் அது பொய்த்துப் போய் விடக்கூடாது எனவே, துணை முதலமை ச்சரை வைத்து விழாவினை நடத்துங்கள்” என முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

பள்ளிக் கல்வித் துறை என்றாலே முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் துள்ளிக் குதித்து வருவார்கள்.அவர்களின் கரங்களை வலு சேர்க்கும் விதமாக உங்கள் பணிகளில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். பள்ளிக் கல்வித் துறையில் “திறன்” என்ற திட்டத்தினையும், “TN SPARK” எனும் பாடத் திட்டத்தினையும் துணை முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள். மாணவர்களுக்கு கணினி சார்ந்த அடிப்படை அறிவினை பெறுவதற்காக இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக “TN SPARK” எனும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று புதிதாக பணி நியமனம் பெறும் இடைநிலை ஆசிரியர்களாகிய நீங்கள் ஆசிரியர் பணியினை மிகவும் கவனமாக மேற்கொள்ள வேண்டும்.ஆசிரியர் சங்கத்தினை சார்ந்தவர்களும் இவ்வாசிரியர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்ந்தாலும் ஆக்கப் பூர்வமான கேள்விகளை எழுப்புங்கள்.எதுவுமே செய்யாதவர்களை பார்த்து “எதுவுமே செய்ய மாட்டீர்களே” என ஒரே ஒரு கேள்வியினை மட்டும் கேட்பார்கள்.பத்து கோரிக்கைகளில் ஏழு கோரிக்கைகளை செய்து முடித்தவர்களைத் தான் எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது செயல்களை ஏன் செய்யவில்லை என அடுக்கடுக்காக கேள்விகளை கேட்கிறார்கள். அதனையும் ஏற்றுக்கொண்டு படிப்படியாக அனைத்து கோரிக்கைகளையும் செய்து முடிக்கவே திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவமனையில் இருந்து கொண்டே மாவட்ட ஆட்சியர்களிடமும் பயனாளிகளிடமும் காணொலி காட்சியின் மூலம் கலந்துரையாடி ஓய்வு நேரத்திலும் தமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள் மக்களுக்காக ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பள்ளிக் கல்வித் துறையின் 2.0 மூலம் 2026-ஆம் ஆண்டில் இன்னும் அதிகமான திட்டங்களை செயல்படுத்தி காட்டுவோம் என உறுதிபடக் கூறி, இன்று புதிதாக பணி நியமனம் பெறும் இடைநிலை ஆசிரியர்களாகிய உங்களுக்கு மீண்டும் எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி பேசினார்.

## தி.மு.க. தொண்டர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் **விழுப்புரம் மத்திய, திருப்பூர் மத்திய, ஈரோடு மத்திய** ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

தலைவர் - எம். ரகு கொந்தாமூர், கிளியனூர் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் – எஸ்.எஸ். பாலு 2, வள்ளலார் நகர், நீலாம்பரி தெரு, வண்டிமேடு, விழுப்புரம்.

அமைப்பாளர் - ஆர். கபாலீஸ்வரன் 214, ஜி.ஆர்.பி. தெரு, விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் – 1) செ. அமர்ஜி தென்றல் தெரு, வண்டிமேடு, விழுப்புரம். 2) கே.சி. தயாநிதி 59, லிங்கம் நகர் விரிவாக்கம், ராகவன்பேட்டை, விழுப்புரம். 3) ப. குலோத்துங்கன் மந்தக்கரை, அத்தியூர் திருவாதி, விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 4) ஆர். தீனதயாளன் 1-399, பாண்டி ரோடு, ரயில்வே கேட் அருகில், கண்டமங்கலம் மற்றும் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம். 5) ஜி. சசிகுமார் காந்தி நகர், வானூர் மற்றும் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

தலைவர் – பி. சிவக்குமார் 1/244, வ.உ.சி. நகர், கே.செட்டிபாளையம், தாராபுரம் ரோடு, திருப்பூர் - 641604.

துணைத் தலைவர் - சு. ஆறுமுகம் 5/157, ஆற்காடு மாரியம்மன் கோவில் வீதி, இச்சிபட்டி, திருப்பூர் - 641668.

அமைப்பாளர் - இரா. மணி கருணாம்பாள் லே அவுட், தாராபுரம் ரோடு, திருப்பூர் - 641608.

துணை அமைப்பாளர்கள் – 1) த. பிரபு (எ) பாலசுப்ரமணியன் 4/287, திருவள்ளுவர் நகர், இடுவாய், திருப்பூர் - 641687. 2) பி. நேதாஜி 2/551, மூகாம்பிகை நகர், இடுவம்பாளையம் அஞ்சல், திருப்பூர் - 641687. 3) ஜெய பிரகாஷ் 38/52, அமரன் ஜெயபிரகாஷ் வீதி, பல்லடம், திருப்பூர். 4) ஆர். ஜெகதீஸ் 3/132, ஆவாரங்காடு தோட்டம், குருநாதம்பாளையம், திருப்பூர் - 641665. 5) ப. சூர்யா மோகன் சூர்யா எலக்ட்ரிகல்ஸ், வீரபாண்டி பிரிவு, திருப்பூர்.

### ஈரோடு மத்திய மாவட்டம்

தலைவர் - பி.கே. குலசேகரன் 42, பெருமாம்பாளையம், அய்யம்பாளையம், கவுந்தப்பாடி, பவானி – 638455, ஈரோடு. துணைத் தலைவர் – ஆனந்தன் (எ) கே.ஆர். ரங்கசாமி 2/69, கோவில்பாளையம், மூங்கில்பாளையம், பெருந்துறை - 638056, ஈரோடு.

அமைப்பாளர் – கே. வேலுச்சாமி கே.கே.வி. தோட்டம், குங்குமபாளையம், ஓலகடம் அஞ்சல், பவானி – 638302 ஈரோடு.

துணை அமைப்பாளர்கள் – 1) கே.ஆர். சங்கர் 8/118, கவுண்டன்பாளையம், துடுப்பதி, பெருந்துறை - 638057, ஈரோடு. 2) எ. அங்கமுத்து 7, கரட்டுபாளையம், சிறுகளஞ்சி, ஊத்துக்குளி வழி, சென்னிமலை, ஈரோடு. 3) பி. பாஸ்கரன் 28/36, கருக்கம்பாளையம், பெத்தாம்பாளையம், பெருந்துறை, ஈரோடு. 4) வி. சரவணன் 1/175, பாப்பம்பாளையம், திங்களூர், பெருந்துறை - 638055, ஈரோடு. 5) ஜி. முத்துவேல் முகாசிப்புதூர், அம்மாபேட்டை, பவானி, ஈரோடு. 6) சௌந்தரராஜன் 538/ஏ2, பி.கே. பழையூர், கன்னப்பள்ளி, அம்மாபேட்டை - 638504, ஈரோடு.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24-07-2025.

**மாஸ்டர் பெ. சேகர்**
செயலாளர்
தி.மு.க. தொண்டர் அணி

## தி.மு.க. பொறியாளர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## பொறியாளர் அணிச் செயலாளர் கு. கருணாநிதி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. பொறியாளர் அணியின் விருதுநகர் வடக்கு மாவட்டம் - சிவகாசி மாநகரம், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – நாகர்கோவில் மாநகரம் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

### சிவகாசி மாநகரம்

அமைப்பாளர் - எம்.ஆர்.எஸ்.வைரமுத்து 86/202 பி, மேலரத வீதி, திருத்தங்கல். விருதுநகர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) ஆர்.சிவபிரகாஷ் 119/1, எம்.ஜி.ஆர். தெரு, ஆலமரத்துப்பட்டி ரோடு, திருத்தங்கல் 2) பி.மணி கண்டன் 133 இ4/5 முத்துமாரியம்மன் தெரு, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல். 3) எம்.மணிராஜ், 137, எவிடி புதூர் தெரு, சிவகாசி. விருதுநகர். 4) எம்.எஸ். முஹம்மது மதார் பதுரூதின், 32, சீதக்காதி நடுத்தெரு, சிவகாசி, விருதுநகர். 5. ஜி.விக்னேஷ்வரன், 183, சுந்தரம் தெரு, சிவகாசி, விருதுநகர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

### நாகர்கோவில் மாநகரம்

அமைப்பாளர் - ரா. நிஷாந்த் 2/114, வணிகர் தெரு, பறக்கை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629601.

துணை அமைப்பாளர்கள் - 1) சை. ஆலன் ஜோஸ் 108, வேதநாயகம் தெரு, புதுக்குடியிருப்பு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 2) டி.எஸ். பர்ணபால் 5-193-1, பெத்தேல் காட்டேஜ், கோட்டவிளை ரோடு, பார்வதிபுரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 3) ரா. அனிஷ் 1-72, பொட்டல்விளை, தெங்கம்புதூர், பறக்கை, கன்னியாகுமரி மாவட்டம் – 629601. 4) மோ. இன்பசேகரன் 101ஏ-259/1, ஜோதி தெரு, கிறிஸ்து நகர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 5) சு. ரமேஷ் 19/9சி2, தெற்கு அஞ்சு குடியிருப்பு, தெங்கம்புதூர், கன்னியாகுமரி மாவட்டம். 6) ஞா. கிளமென்ட் 132டி2, பவுல் தெரு, புதுக்குடியிருப்பு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24-07-2025.

**கு. கருணாநிதி**
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட மற்றும் மாநகர துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

### தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

தூத்துக்குடி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட கோ.செல்வ மணிகண்டன் மறைவெய்தியதாலும் - வினோத்ராஜ் தொழில் நிமித்தம் காரணமாக வேறு ஊர் இடம் பெயர்ந்த காரணத்தால் அவருக்குப் பதிலாகவும் கீழே குறிப்பிடப்பட்டவர்கள் தூத்துக்குடி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

**செல்வி எஸ்.யோகலட்சுமி,** பி.எஸ்சி., எம்பிஏ., 53, டூவிபுரம் 3வது தெரு, தூத்துக்குடி - 3.

**வி.பி.ஆகாஷ்பாண்டியன்,** பிபிஏ., எல்எல்பி., 7/107, வடக்குத் தெரு, கசவன்குன்று கிராமம், எட்டயபுரம் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம்.

### சேலம் மத்திய மாவட்டம்

### சேலம் மாநகரம்

சேலம் மத்திய மாவட்டம், சேலம் மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஜெ.மோகன் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **லோ.வெங்கடேஷ்** (25-1ஈ, இந்திரா நகர், பழைய சூரமங்கலம், சேலம்-5) அவர்கள் சேலம் மாநகர துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட அந்தந்த மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகளுடன் மேற்கண்டவாறு நியமிக்கப்பட்டவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24-07-2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, அ.தி.மு.க. பா.ம.க.தே.மு.தி.க. அ.ம.மு.க. வைச் சேர்ந்த 290 பேர் அக்கட்சிகளை விட்டு விலகி மாவட்ட கழக செயலாளர், அமைச்சர். இரா. இராஜேந்திரன் முன்னிலையில். தி.மு.க. வில் இணைந்தனர். அவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர். கைத்தறி ஆடை அணிவித்தார். உடன் மாவட்ட கழக பொருளாளர். மு.கார்த்திகேயன் துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, ஒன்றிய செயலாளர்கள். ஒ எம்.ரமேஷ் (கிழக்கு) ஏ.சி.எம். செல்வகுமரன் (தெற்கு). மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர். ராம்பிரகாஷ் ஆகியோர் இருந்தனர்.





கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி,பர்கூர் தேர்வுநிலை பேரூராட்சி தமிழ்நாடு நகர்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம், மற்றும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் ரூ.114.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தார்ச்சாலைகள். சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் பழைய தார்ச்சாலை புதுப்பித்தல் மற்றும் ரூ.125.00 இலட்சம் மதிப்பீட்டில் பழைய சிமெண்ட் சாலை புதுப்பித்தல்,15வது நிதி ஆணைய நிபந்தனை மற்றும் நிபந்தனையற்ற மானிய நிதி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் சாலைகள் பணி மற்றும் மற்றும் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் அமைத்தல் பணிகள் தொடங்கி வைத்தும் பர்கூர் தேர்வுநிலை பேரூராட்சி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் 63KVA புதிய மின் மாற்றி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பாலன் , ராஜேந்திரன், சந்தோஷ் குமார், வெங்கடப்பன் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.